**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்.**
**முன்னிலை : திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்**

2025–ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 20 ஆம் நாள் புதன்கிழமை
திருவள்ளுவராண்டு 2056, ஸ்ரீவிசுவாவசு வருடம், ஆவணித்திங்கள் 04 ம் நாள்

**இ.ம.எண். 2/2024**

**in**

**அ.வ.எண்.67/2021**

1. R.ஜேன் எமிலியா
2. K.S.ஜோஷுவா டேனியல் … மனுதாரர்கள்/வாதிகள்

/எதிர்/

1. பாப்பாத்தி
2. வட்டாட்சியர்,
   காங்கயம் வட்டாட்சியர் அலுவலகம்
3. நகராட்சி ஆணையாளர்,
   காங்கயம் நகராட்சி அலுவலகம்
4. மாவட்ட ஆட்சியர், திருப்பூர் … எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு என் முன்பாக 28.07.2025 ம் தேதியன்று இறுதி விசாரணைக்கு கொண்டு வரப்பட்டு மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.சரவணன், B.Com.,M.L., அவர்கள் ஆஜராகியும், 1 ம் எதிர்மனுதாரர்/1 ம் பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.S.ராமகிருஷ்ணன், B.Com., B.L., அவர்கள் ஆஜராகியும், 2 முதல் 4 எதிர்மனுதாரர்கள்/2 முதல் 4 பிரதிவாதிகளை திறந்த நீதிமன்றத்தில் அழைத்தும் முன்னிலையாகாததால் தோன்றாத்தரப்பினர்கள் ஆக்கப்பட்டும், இரு தரப்பு வாதங்களையும்,

வழக்காவணங்களையும் பரிசீலனை செய்து, இதுநாள் வரை இந்நீதிமன்ற சீரான பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றத்தால் பகரப்படும்.

**உத்தரவு**

மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் கோயம்புத்தூர் மாவட்டம், வெள்ளலூர் ரோடு, போத்தனூர், கதவு எண் 131–ல் இயங்கும் C.S.I. UNION CHURCH–ன் பொறுப்பாளர் Rev.Gersome Jacob அவர்களோ அல்லது அவர் சார்பாக சர்ச் நிர்வாகிகளோ, 15.02.1984–ம் தேதி லேட். சாமிதுரைக்கும், 1ம் வாதிக்கும் நடந்த திருமணம் குறித்து திருமண பதிவேடு அசல் புத்தகத்துடன் மனுதாரர்கள் தரப்பில் சாட்சியம் அளிக்க உத்தரவு பிறப்பிக்ககோரி உரிமையியல் விசாரணை நடைமுறைச் சட்டம் கட்டளை 16 விதி 15ன் படி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்:–**

i) அசல் வழக்கானது இம்மனுவின் மனுதாரர்களால் 1, 2 மனுதாரர்கள்/1, 2 வாதிகள் மட்டுமே இறந்து போன லேட். சாமிதுரையின் சட்டப்பூர்வமான வாரிசுதாரர்கள் என்று விளம்புகை கோரியும், 3ம் பிரதிவாதியின் அலுவலகத்தில் பிறப்பு இறப்பு பதிவேட்டில் 1ம் வாதியின் கணவர் லேட். சாமிதுரையின் இறப்பு பதிவில் சாமிதுரையின் மனைவி பாப்பாத்தி என்பதை திருத்தம் செய்து லேட். சாமிதுரையின் மனைவி R. ஜேன் எமிலியா என்று திருத்தம் செய்ய 3ம் பிரதிவாதிக்கு செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்க கோரியும் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 1ம் மனுதாரர்/1ம் வாதி லேட்.சாமிதுரையின் மனைவி மற்றும் 2ம் மனுதாரர்/2ம் வாதி லேட். சாமிதுரையின் மகன் ஆவார்.

ii) மேற்படி லேட். சாமிதுரைக்கும், 1ம் வாதிக்கும், கோயம்புத்தூர் மாவட்டம், போத்தனூரில் உள்ள C.S.I. UNION CHURCH–ல், கிருத்துவ முறைப்படி பெரியோர்கள் மற்றும் உறவினர்கள் முன்னிலையில் கடந்த 15.02.1984–ம் தேதி திருமணம் நடைபெற்றது. மேற்படி வழக்கில் மனுதாரர்கள் தரப்பில் வா.சா.1 ஆக விசாரணை செய்து முடிக்கப்பட்டு, மனுதாரர்கள் தரப்பில் 1 முதல் 9 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி வழக்கு மனுதாரர்கள் தரப்பில் வேறு சாட்சிகள் விசாரணை செய்ய வாய்தாவில் உள்ளது. மேற்படி வழக்கில் லேட். சாமிதுரைக்கும், 1ம் வாதிக்கும் உறவினர்கள் முன்னிலையில் கடந்த 15.02.1984ம் தேதி திருமணம் நடைபெற்று மேற்படி திருமணம் C.S.I. UNION CHURCH–ல் உள்ள பதிவு ஏட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

iii) மேற்படி திருமணம் குறித்த பதிவு ஆவணங்களை தாக்கல் செய்து சாட்சியம் அளிக்க மேற்படி C.S.I. UNION CHURCH–ன், பொறுப்பாளர் Rev.Gersome Jacob அவர்களோ அல்லது அவர் சார்பாக சர்ச் நிர்வாகிகளோ, 15.02.1984–ம் நடந்த திருமண பதிவேடு அசல் புத்தகத்துடன் மனுதாரர்கள் தரப்பில் சாட்சியம் அளிக்க வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இம்மனு அனுமதிக்கவிடில் மனுதாரர்களுக்கு பெருத்த கஷ்ட நஷ்டம் ஏற்படும். எனவே கோயம்புத்தூர் மாவட்டம், வெள்ளலூர் ரோடு, போத்தனூர், கதவு எண்.131–ல் இயங்கும் C.S.I. UNION CHURCH–ன் பொறுப்பாளர் Rev.Gersome Jacob அல்லது அவர் சார்பாக சர்ச் நிர்வாகிகளோ, 15.02.1984–ம் தேதி லேட் சாமிதுரைக்கும், 1ம் வாதிக்கும் நடந்த திருமணம் குறித்து திருமண பதிவேடு அசல் புத்தகத்துடன் மனுதாரர்கள் தரப்பில் சாட்சியம் அளிக்க உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என்பதே மனுதாரர்கள் தரப்பு மனுவின் சுருக்கமாகும்.

**2. 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரை சுருக்கம் :–**

i) மனுதாரர்கள் மனு பொய் மோசடி, சட்டப்படியும் நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல. இவ்வெதிர்மனுதாரர்/பிரதிவாதி இவ்வெதிர் உரையில் வெளிப்படையாக ஒப்புக்கொண்ட சங்கதிகளைத் தவிர மனுவில் கண்ட மற்ற சங்கதிகளை மனுதாரரே கண்டிப்பாக நிரூபனம் செய்ய வேண்டியது.

ii) மனுதார்கள் அசல் வழக்கில் இறந்துபோன சாமிதுரைக்கு இரண்டு மனைவியென்றும் இறந்து போன சாமிதுரை இறப்பு சான்றிதழில் திருத்தம் செய்யவும் தாவா தாக்கல் செய்துள்ளார். மனுதாரர்கள்/வாதிகளின் கூற்றை நிருபிக்கவேண்டி கடந்த 15.02.1984ம் தேதிய திருமண பதிவேடு உண்மை நகல் வாதி தரப்பில் சான்றாவணமாக தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் மேற்படி திருமணம் நடந்த தேதியில் மேற்படி ஆவணத்தினை பதிவு செய்த நபரையோ அல்லது அதில் சாட்சி செய்த நபரையோ விசாரித்து மேற்படி ஆவணத்தினை நிருபிக்க வேண்டியதே தவிர மேற்படி ஆவணம் பதிவேடு பாராமரித்து வரும் அலுவலக நபரை விசாரித்து நிருபிக்கவேண்டும் என தாக்கல் செய்துள்ள இம்மனு ஏற்றுக்கொள்ள கூடியதல்ல.

iii) 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் வாதிகள் பெயர் ஒற்றுமையை பயன்படுத்தி பொய்யான சங்கதிகள் கண்டு சான்று பெற முயன்று வருகிறார் என எதிர்வழக்குரையில் சொல்லியுள்ளார். இந்நிலையில் 2ம் மனுதாரர் தனது தாயாரை நீதிமன்றத்தில் சாட்சியாக விசாரித்தால் உண்மை நிலை தெரிந்து விடும் என கருதியே 2ம் பிரதிவாதி இறந்து போன சாமிதுரையின் சகோதர் சகோதரிகளை சாட்சியாக

விசாரத்தாலே மனுதாரர்கள்/வாதிகள் தாக்கல் செய்துள்ள வழக்கு பொய்யாகிவிடும் என தெரிந்தே மனுதாரர்கள்/வாதிகள் சாமிதுரையின் உறவினர்களை சாட்சியாக விசாரிக்காமல் காலதாமதப்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தில் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்.

iv) 2ம் மனுதாரர் முதல் விசாரனை பிரமாண பத்திரிக்கை தாக்கல் செய்து வாதி தரப்பில் ஆவணமாக தாக்கல் செய்துள்ள ஆவணத்தின் உண்மை தன்மையை பொறுத்து நிருபிக்கும் பொருட்டு அசல் ஆவணத்தினை ஒப்படைத்து சாட்சியை விசாரிக்க சாட்சி சம்மன் அனுப்ப அனுமதி கோரி தாக்கல் செய்துள்ள மனுவில் தகுந்த காரணம் எதுவும் மனுவில் கூறாமல் தாக்கல் செய்துள்ள இம்மனு ஏற்றுக்கொள்ள கூடியதல்ல. மனுதாரர்கள்/வாதிகள் தாக்கல் செய்த வழக்கிற்கு பின்னிட்டு எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்த பின்பு தாவாவில் ஏழுவினாவிற்கு பின்னிட்டு வாதி தரப்பில் விசாரிக்க போகும் சாட்சியின் விபரங்கள் நீதிமன்றத்தில் குறிப்பிட்ட காலத்திற்க்குள் தாக்கல் செய்திட வேண்டும் என்ற நிலையில் மனுதார் காலம் கடந்து தாக்கல் செய்துள்ள இம்மனு ஏற்றுக்கொள்ளகூடியதல்ல. எனவே இம்மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டும் என்பதே 1ம் எதிர்மனுதாரர் தரப்பு எதிருரையின் சுருக்கமாகும்.

3. இருதரப்பும் கேட்கப்பட்டது. மனு, எதிருரை, இருதரப்பு வாதங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. இருதரப்பிலும் சாட்சிகள் யாரும் விசாரணை செய்யப்படவில்லை. மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் சான்றாவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

4. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா ? இல்லையா? என்பதாகும்.

**5. தீர்வு:–**

மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் லேட். சாமிதுரைக்கும், 1ம் வாதிக்கும் உறவினர்கள் முன்னிலையில் கடந்த 15.02.1984ம் தேதி திருமணம் நடைபெற்று மேற்படி திருமணம் C.S.I. UNION CHURCH–ல் உள்ள பதிவு ஏட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும் மேற்படி திருமணம் குறித்த பதிவு ஆவணங்களை தாக்கல் செய்து சாட்சியம் அளிக்க மேற்படி C.S.I. UNION CHURCH–ன், பொறுப்பாளர் Rev.Gersome Jacob அவர்களோ அல்லது அவர் சார்பாக சர்ச் நிர்வாகிகளோ, 15.02.1984–ம் நடந்த திருமண பதிவேடு அசல் புத்தகத்துடன் மனுதாரர்கள் தரப்பில் சாட்சியம் அளிக்க உத்தரவிட வேண்டும் என்று சொல்லப்பட்டு 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி தரப்பில் கடந்த 15.02.1984ம் தேதிய திருமண பதிவேடு உண்மை நகல் வாதி தரப்பில் சான்றாவணமாக தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் மேற்படி திருமணம் நடந்த தேதியில் மேற்படி ஆவணத்தினை பதிவு செய்த நபரையோ அல்லது அதில் சாட்சி செய்த நபரையோ விசாரித்து மேற்படி ஆவணத்தினை நிருபிக்க வேண்டியதே தவிர மேற்படி ஆவணம் பதிவேடு பாராமரித்து வரும் அலுவலக நபரை விசாரித்து நிருபிக்கவேண்டும் என தாக்கல் செய்துள்ள இம்மனு ஏற்றுக்கொள்ள கூடியதல்ல என்றும் எனவே இம்மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டும் என்றும் சொல்லப்பட்டுள்ளது.

6. வழக்காவணங்களை பரிசீலிக்கும் போது அசல் வழக்கானது மனுதாரர்கள்/வாதிகளால் வாதிகள் தான் இறந்துபோன லேட். சாமிதுரையின் சட்டப்பூர்வமான வாரிசுகள் என்று விளம்புகை பரிகாரம் கோரியும், செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் மீது தாக்கல் செய்யப்பட்டு கடந்த 29.06.2022 அன்று 3ம் பிரதிவாதி தரப்பில்

எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டு, கடந்த 13.10.2022 அன்று 4ம் பிரதிவாதி தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டு, கடந்த 12.12.2022 அன்று அசல் வழக்கில் வழக்கெழுவினாக்கள் வனையப்பட்டு, கடந்த 11.10.2023 அன்று வா.சா.1 விசாரிக்கப்பட்டு வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.9 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டு கடந்த 13.09.2023 அன்று வா.சா.2 விசாரிக்கப்பட்டு, அசல் வழக்கானது வாதிகள் தரப்பு சாட்சி விசாரணைக்காக ஒத்தி வைக்கப்பட்ட நிலையில் C.S.I. UNION CHURCH–ன், பொறுப்பாளர் Rev.Gersome Jacob அவர்களோ அல்லது அவர் சார்பாக சர்ச் நிர்வாகிகளோ, 15.02.1984ம் தேதியில் நடந்த திருமண பதிவேடு அசல் புத்தகத்துடன் மனுதாரர்கள் தரப்பில் சாட்சியம் அளிக்க உத்தரவிடக்கோரி இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

7. வழக்காவணங்களைப் பரிசீலிக்கும்போது அசல் வழக்கானது மனுதாரர்களால் மனுதாரர்கள் மட்டுமே இறந்துபோன லேட். சாமிதுரையின் சட்டப்பூர்வ வாரிசுகள் என விளம்புகை மற்றும் செயலுறுத்துக்கட்டளை பரிகாரத்திற்காக தாக்கல் செய்யப்பட்டு 1ம் எதிர்மனுதாரர் தான் இறந்துபோன லேட். சாமிதுரை என்பவரின் சட்டப்பூர்வ மனைவி என்று மறுக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் லேட். சாமிதுரைக்கும், 1ம் வாதிக்கும், கோயம்புத்தூர் மாவட்டம், போத்தனூரில் உள்ள C.S.I. UNION CHURCH–ல், கிருத்துவ முறைப்படி கடந்த 15.02.1984–ம் தேதி திருமணம் நடைபெற்றது என்றும் மேற்படி திருமணம் குறித்த பதிவு ஆவணங்களை தாக்கல் செய்து சாட்சியம் அளிக்க மேற்படி C.S.I. UNION CHURCH–ன், பொறுப்பாளர் Rev.Gersome Jacob அவர்களையோ அல்லது அவர் சார்பாக சர்ச் நிர்வாகிகளையோ சாட்சியாக விசாரிக்க வேண்டும் என்று மனுதாரர் தரப்பில் இம்மனுவில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் இந்நீதிமன்றத்தால் ஏற்கும்படியாகவே உள்ளது.

8. எனவே மேலேகண்ட பரிசீலனைகளின்படி அசல் வழக்கானது வாதிகள் தான் லேட். சாமிதுரையின் சட்டப்பூர்வ வாரிசுகள் என்று விளம்புகை மற்றும் செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி எதிர்மனுதாரர்கள் மீது தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் தங்களது தரப்பு வழக்கை நிரூபணம் செய்ய மனுதாரருக்கு போதிய வாய்ப்பை வழங்குவது நீதியின் பால் சிறந்தது என்று இந்நீதிமன்றம் கருதுவதாலும், இம்மனுவில் கண்டுள்ள சாட்சியின் சாட்சியம் மற்றும் ஒப்படைக்க கோரும் ஆவணங்கள் அசல் வழக்கை இறுதியாக தீர்மானிக்க இந்நீதிமன்றத்திற்கு உதவிகரமாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் கருதுவதாலும், இம்மனுவை அனுமதிப்பதால் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித கஷ்ட நஷ்டமும் ஏற்படப்போவதில்லை என்பதாலும் இம்மனுவில் மனுதாரர் தரப்பில் சொல்லப்பட்டுள்ள காரணங்கள் ஏற்கும்படியாக உள்ளதாலும் மேற்படி சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய எதிர்மனுதாரர்களுக்கு போதிய வாய்ப்பும் வசதியும் இருப்பதாலும் இரு தரப்பினர்களுக்கும் இடையே உள்ள பிரச்சனையை இறுதியாக தீர்க்கும் பொருட்டும் இம்மனுவை அனுமதித்து உத்தரவிடுவதே நீதியின்பால் சிறந்தது என்றே இந்நீதிமன்றம் தீர்மானித்து இம்மனுவை அனுமதித்து உத்தரவிடுகிறது.

**முடிவாக,**

இம்மனு அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்ட பின்னர், இன்று 2025–ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 20 ம் நாள் என்னால் அவையறிய பகரப்பட்டது.

K S MALATHI Digitally signed by K S MALATHI Date: 2025.08.20 19:19:57 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
காங்கயம்.

**<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u>** : இல்லை

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u>** : இல்லை

K S MALATHI
Digitally signed by K S MALATHI
Date: 2025.08.20 19:20:06 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
காங்கயம்.